மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஈரோடு தாலுகா காஞ்சிக் கோவில் கிராமம் கொளத்தான்வலசு பகுதியைப் பொறுத்தமட்டில் பிரிவு 4(1) முன்மொழிவும் பிரிவு 6 விளம்பலும் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. முதல்நிலை மதிப்பீட்டைப் பெற்றவுடன் அவார்டு செய்து, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அரிசனங்களுக்குப் பட்டா வழங்குவார்.

(இ) ஈரோடு தாலுகா காஞ்சிக்கோவில் கிராமம் சின்னயம்பாளையம் பகுதியைப் பொறுத்தமட்டில் பிரிவு 4 (1) முன்மொழிவும் பிரிவு 6 விளம்பலும் வருவாய்த்துறையினரால் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. முதல்நிலை மதிப்பீடு, அவார்டு, பட்டா வழங்கல் எனபன கோவை மாவட்ட ஆட்சியரால் கவனிக்கப்படும்.

Construction of Houses for the Harijans.

*10 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal with the Government to construct houses for the Harijans living in Tirupangur, Thanjavur district where Nandanar was born ?

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தஞ்சை மாவட்டம், நந்தனார் பிறந்த திருப்பன்கூரில் வாழும் அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு திட்டமிட்டிருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம். நடப்பு ஆண்டில் இவ்வூரில் அரிசனங்களுக்காக 20 வீடுகள் கட்டித்தர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

Employment Exchanges

*11 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether efforts are being taken by the Employment Exchanges to find appointment at Star Hotels for candidates coming out of the Catering Institute; and

(b) if so, the steps taken during 1971-72?